1 கொரிந்தியர்

வரலாற்றுப்
பிண்ணனி

கொரிந்து பட்டணம்

- கொரிந்துப் பட்டணம் அத்தேனே நகரத்தின் மேற்குத் திசையில் தென் கிரேக்கு நிலப்பரப்பில் அமைந்துள்ளது.
- கொரிந்து ஒரு சர்வதேச பெருநகரமாக இருந்தது. பின்னணியில் இருந்து மக்கள் நிரம்பியிருந்தனர்.
- அஃப்ரோடைட் போன்ற கடவுள்களின் சிலை வழிபாடு, குறிப்பாக இந்த நகரத்தில் முக்கியத்துவம் வாய்ந்திருந்தது.
- கொரிந்து ஒரு நவீன நகர்புறத்தைப் போலவே இருந்தது.



- இங்கு வாழ்ந்த மக்கள் அருவருக்கத்தக்க சமயச் சார்புடையோராயிருந்தபடியால் பாவ நடத்தையில் ஈடுபட முடிவற்ற வாய்ப்புகள் அங்கு இருந்தது.
- சிலை வழிபாடு நகரத்தின் மற்றொரு ஒழுக்கக்கேடாக இருந்தது.

- அப்போஸ்தலனாகிய பவுல் தனது இரண்டாவது ஊழிய பயணத்தின் போது கொரிந்து பட்டணத்திற்கு வருகை புரிந்தார்.(அப் 18)
- அவருடைய சுவிசேஷ ஊழியத்தினிமித்தம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.
- சபை ஒன்று கொரிந்து நகரத்தில் நிறுவப்பட்டது.

சபையில் சமூகத்தின் தாக்கம்::

- கொரிந்துவில் உள்ள சபை மிகவும் பாவம் நிறைந்த சூழலில் இருந்தது.
- சபையின் பல பிரச்சனைகள் நகரத்தின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- பிரபுத்துவம் இல்லாதது மக்களை ஜனநாயகவாதிகளாகவும், கட்டுப்பாட்டில் சகிப்புத்தன்மையற்றவர்களாகவும் ஆக்கியது. இந்த சுயாதீனமான வாழ்க்கைமுறை சபைக்குள் கொண்டு செல்லப்பட்டது.
- ஒவ்வொரு உறுப்பினரும் மற்ற அனைவருக்கும் போட்டியாக தனக்கு பிடித்த தலைவரின் பின்னால் வரிசையாக நிற்கும் போக்கு காட்டப்பட்டது.

- கிரேக்கு முழுவதிலும் மிகவும் வளமான நகரமாக இருந்த கொரிந்தில் செல்வம் மிகுந்திருந்த போதிலும் அந்த செல்வத்தில் அனைவருக்கும் பங்கு இல்லை.
- பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருந்தது. அடிமைகள் மற்றும் விடுவிக்கப்பட்டவர்கள் இருவரும் அதிக எண்ணிக்கையில் இருந்தனர்.
- கொரிந்துவில் உள்ள சபையில் இந்த கட்டத்தில் ஒரு பெரிய குழப்பம் இருந்தது; சிலைகளுக்குப் பலியிடப்பட்ட இறைச்சியை உண்பதில் எந்தத் தீங்கும் இல்லை என்று சிலர் உணர்ந்தனர், மற்றவர்கள் அவ்வாறு செய்யும்போது அவர்கள் உருவ வழிபாட்டில் ஈடுபடுவதாக உணர்ந்தனர்.
- ஒருவன் தன் நண்பருடன் உணவருந்தச் சென்றபோது, அவருக்கு பரிமாறப்பட்ட இறைச்சி சிலை வழிபாட்டிலிருந்து வந்ததா என்பதை அறிய வழி இல்லை.
- சிலை கோவில்களில் வழங்கப்படும் விருந்துகளில் கலந்துகொள்வதா என்பதில் குழப்பம் இருந்தது. இந்த விருந்துகள் சிறந்த சமூக நிகழ்வுகளாக இருந்தன. மேலும் மதம் மாறிய பல புறஜாதியினர் தொடர்ந்து அழைப்புகளைப் பெற்றனர்.
- பொல்லாங்கு நிறைந்த நகரத்தில் இருந்த சபையில் நிலவி வந்த பிரச்சனைகளை பவுல் திறம்பட இந்த நிரூபத்தில் கையாண்டுள்ளார்.

புத்தகக்
குறிப்பு

- **ஆசிரியர்** - பவுல்
- **இணை ஆசிரியர்** - சொஸ்தெனே {ஜெப ஆலய தலைவனாயிருந்து பவுலின் சுவிசேஷத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவன்- (அப் 18:17) }
- **காலம்** - வேத வல்லுநர்களின் கருத்து
  - கி.பி 53 - 57 கால கட்டத்தில் எழுதியிருக்கலாம்
  - கொரிந்துவில் தன் ஊழியத்தை நிறைவேற்றிய பின் எபேசுவுக்குச் சென்று அங்கு சுமார் மூன்று ஆண்டுகள் சென்ற போது இந்த கடிதத்தை கொரிந்து சபைக்கு எழுதியிருக்கக்கூடும்.
- **இடம்** - எபேசுவிலிருந்து எழுதப்பட்டது.
- இந்த நிரூபம் நம் வேதாகமப் பட்டியலில் கொரிந்து சபைக்கு எழுதப்பட்ட முதலாம் நிரூபம் என்று அழைக்கப்பட்டாலும், இதற்கு முன்னரே பவுலுக்கும் கொரிந்தியருக்கும் இடையே கடிதம் பரிமாறப்பட்டுள்ளது என்பதை இந்த நிரூபத்தின் சில வசனங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

5:9, >> விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்.
7:1 >> நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக்குறித்து ....

புத்தகத்தின்
நோக்கம்

- சபையில் நடந்து வரும் பாலியல் ஒழுக்கக்கேடு மற்றும் அங்கிருந்த உறுப்பினர்கள் மத்தியில் இருந்த பிளவு ஆகியவற்றைப் பற்றி பேச பவுல் விரும்பினார்..
- பண்டைய இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் தேவனுக்கு விரோதமாகச் செய்த துரோகத்தைப் பற்றி சபைக்கு நினைப்பூட்டி அவர்களின் தவறை உணரச் செய்ய முற்பட்டார்..
- கொரிந்தில் உள்ள சபை மக்கள் தாங்கள் விட்டு வந்த கலாச்சாரத்தை முழுமையாக உடைக்க முடியாமல் இருப்பதை பவுல் அவர்களுக்கு சுட்டிக்காட்டுகிறார்.
- அவர்களுக்கிடையே இருந்த ஐயத்திற்கிடமான நடைமுறை வழக்கங்களைக் குறித்தான அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்.
- தங்களுக்குள்ளிருந்த சுவிசேஷத்திற்கு விரோதமான காரியங்களை மிகச் சாதாரணமாக எண்ணி உலகப்பிரகாரமான ஜென்ம சுபாவமுள்ள சபையாக திகழாதபடி கொரிந்து சபையை பவுல் கண்டித்து உணர்த்துகிறார்.
- கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இந்த நிரூபம் இன்றைய காலகட்டத்திற்கும் பொருத்தமுடையதாக இருந்து நிலை நிற்கிறது.
- கொரிந்து பட்டணத்திற்கு திரும்பவும் வர எண்ணங்கொண்டிருப்பதை இந்நிரூபத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

புத்தகத்தின் பிரிவுகள்

- அறிமுகம் (1:1-9)
- சபையில் காணப்பட்ட பிரிவினைகள் (1:10 - 4:21)
    - 1:10 - 3:23 >> சபையின் தலைவர் கிறிஸ்து
    - 4:1 - 21 >> கிறிஸ்துவின் ஊழியக்காரன்
- சபையில் காணப்பட்ட ஒழுக்கக்கேடுகள் (5:1 - 6:20)
    - 5:1 - 13,6:12 - 20 >> விபசாரம்
    - 6:1 - 11 >> வழக்கு
- சபையில் நிலவும் ஐயங்களுக்கான பதில்கள் (7:1 - 11:1)
    - 7:1 - 40 >> விவாகம்
    - 8:1 - 11:1 >> போஜனம்
- சபை ஆராதனை ஒழுக்கங்கள் (11:2 - 14:40)
    - 11:2 - 16 >> ஸ்திரீ / புருஷன் - பங்கு
    - 11:17 - 34 >> கர்த்தருடைய இராப்போஜனம்
    - 12:1 - 14:40 >> ஆவியின் வரங்கள்
- உயிர்த்தெழுதலைக் குறித்த விளக்கம் (15:1 - 58)
    - 15:1 - 28 >> கிறிஸ்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலன்
    - 15:29 - 58 >> ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்
- இறுதி அறிவுரை (16:1 - 24)
    - 16:1 - 8 >> பவுலின் எண்ணங்கள்
    - 16:9 - 24 >> அறிவுரைகளும், வாழ்த்தும்

அறிமுகம்
(1:1 - 9)

அதி 1. அழைத்த தேவன் உண்மையுள்ளவர்

- **அனுப்புனர் ::** கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்ட பவுல் & சொஸ்தேனே
- **பெறுநர்::** கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட தேவனுடைய சபைக்கும் & கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவரும்

கொரிந்து சபையினர் ::

- கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் கொண்டவர்கள்
- இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்கள்
- யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்கள்

பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் ::

இச்சொல் , இவ்வுலகத்தினின்று தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று இங்கே பொருள்படும்.கிறிஸ்துவுக்கு சொந்தமான அனைவரின் நடைமுறை நிலைமையும் அவர்களது அனுதின தூய வாழ்வின் மூலமாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

தேவ அழைப்பின் நோக்கம் ::

தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருக்க.

சபையில்
காணப்பட்ட
பிரிவினைகள்
(1:10 - 4:21)

சபையின் தலைவர் கிறிஸ்து

(1:10 - 3:23)

அதி 1.10 - 31 : மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்

தனி மனித தலைவர்களை தங்களுக்கென்று வைத்துக் கொண்டு சபையில் வாக்குவாதங்கள்

பவுலின் அறிவுரை::

- பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டும் (10)
- கிறிஸ்துவே சிலுவையில் அறையப்பட்டார் (13)
- கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றீர்கள் (14)
- சிலுவையைப் பற்றிய உபதேசம் நமக்கு தேவபெலன் (18)
- உலகத்துக்கு பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கதினாலே நம்மை தேவன் இரட்சித்தார் (21)
- எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார் (24)
- மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு , இந்த உலகத்தின் கண்களுக்கு மதிப்பற்றவர்களாகத் தோன்றுகிற மக்களைத் தெரிந்தெடுத்து , அவர்கள் மூலமாகத் அவர் மகிமை அடைகிறார்.(25 - 29)

★ கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (31)

அதி 2. தேவனுடைய ஆவியையுடையவன் தேவனுக்குறியவைகளை அறிவான்

பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தைக் குறித்த குழப்பங்கள்

பவுலின் சுவிசேஷ ஊழியத்தைக் குறித்த விளக்கம்::

- சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவையே பிரசங்கித்தேன் (2)
- உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,என் பேச்சும் என் பிரசங்கமும் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது (4,5)
- நம்முடைய மகிமைக்காக தேவன் ஏற்படுத்தின தேவ ஞானத்தைப் பேசுகிறோம் (7)
- நாங்கள் உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் (12)
- நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம் (13)
- கிறிஸ்துவின் சிந்தை எங்களுக்கு உண்டாயிருக்கிறது (16)

★ **ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான் (15)**

அதி 3. சபையின் ஒரே அஸ்திபாரம் கிறிஸ்து

சபையில் பொறாமை , வாக்குவாதம், பேதங்கள்

பவுலின் கண்டிப்பு::

- பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே (5)
- எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே ...அஸ்திபாரம் போட்டேன்.வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான் (10)
- போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (11)
- அவனவன் தன்தன் வேலைக்குத்தக்கதாய்க் கூலியைப் பெறுவான்(8,12-15) {வேதத்தில் நமக்குக் *கற்பிக்கப்பட்டுள்ளபடி நாம் கட்டுகிறவர்களாயிருப்போமானால், வரவிருக்கிற தீர்ப்பு நாளிலே நம்முடைய ஊழியங்கள் சோதிக்கப்பட்டு நிலைக்கும்*}
- ஒருவன்{*கள்ளப்போதகர்கள்*} தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே {*சபை*} அந்த ஆலயம் (17)
- ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக (21)

★ **நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் (23)**

கிறிஸ்துவின் ஊழியக்காரன்

(4:1 - 21)

அதி 4. புகழ்ச்சி தேவனால் உண்டாகும்

பல கிறிஸ்தவ தலைவர்களுக்கு விசுவாசமாக இருப்பதினால் சபைக்குள் கட்சிகள்/பிரிவினைகள்

பவுலின் எச்சரிக்கை::

- நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள் (5) {*பவுல் உட்பட பிற ஊழியர்களை கர்த்தர் மட்டுமே நியாயந்தீர்க்க முடியும்*}
- ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருங்கள் (6) {*அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்காக ஏழ்மையிலும் துன்புறுத்தலின் கீழும் வாழும் போது கொரிந்திய கிறிஸ்தவர்கள் பெருமையுடன் புகழ் மற்றும் அந்தஸ்தில் கவனம் செலுத்தினார்கள்*}
- ...ஏன் மேன்மைபாராட்டுகிறாய்? (7) {*உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிற கர்த்தரிடத்திலிருந்து எல்லாவற்றையும் பெற்ற நீ அவரிடத்திலிருந்து எதையும் பெறாமல் சுயமாய் அடைந்து கொண்டது போல பெருமையடைவது என்ன?*}
- திருப்தியடைந்திருக்கிறீர்களே. (8-13) {*தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று சுயத்தில் மன நிறைவு கொண்டவர்களாக பெருமை பாராட்டுகிற கொரிந்தியர்களுக்கு மாறான நிலைமையே அப்போஸ்தலர்களுடையதாயிருந்தது*}
- என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் (16) {*பாதையை மாற்றிக்கொண்டு தன் வாழ்க்கையைப் பின்பற்றும்படி அவர்களைத் தூண்டுகிறார்*}

★ **தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது.**

விபசாரம்

(5:1 - 13)

வ்

அதி 5. பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள்

சபை மக்களிடையே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறது

பவுலின் கண்டிப்பு::

- அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள் (2) {*ஒருவன் தன் தந்தையின் மனைவியையே வைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு ஒழுக்கக்கேடு மலிந்திருந்த நிலையில் கிறிஸ்தவர்கள் அதைக் கண்டிக்கவில்லை. அத்தகைய செயலைச் செய்தவனைச் சபையிலிருந்து நீக்குமாறு கட்டளையிடுகிறார் பவுல்*}
- சபை என்ன செய்ய வேண்டும் (5:5a): அவர்கள் அந்தக் குற்றவாளியை சாத்தானிடம் ஒப்படைக்க வேண்டும்.
- ஏன் அதைச் செய்ய வேண்டும் (5:5b): இது அவனைமனந்திரும்புதலுக்குக் கொண்டுவரும், அதனால் அவனுடைய ஆவி காப்பாற்றப்படலாம்.சபையில் குற்றம் பரவாமல் இருக்கும் (5:6-7)
- இந்த ஒழுங்குமுறை சபை உறுப்பினர்களை மட்டுமே உள்ளடக்கும் (12,13)
- பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் (8)

★ **நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருங்கள் (7)**

அதி 6.12 - 20 : வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்

- உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? (15)
- சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர் (15)
- வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? (16)
- கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (17)
- வேசித்தனஞ் செய்கிறவன் தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான் (18)
- நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (19)
- உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயம் (19)
- கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் (20)

★ தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

வழக்கு

(6:12 - 20)

அதி 6. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை

பிரிவினைகளினிமித்தம் ஒருவரோடொருவர் வழக்காடுதல்

பவுலின் அறிவுரை::

- உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? (1)
- அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? (2)
- தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள். (4) { *நியாயத்தை நாடி சபைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய பகுத்தறிவற்ற மனிதர்களை நீதிபதிகளாக நியமித்துக் கொள்வதெப்படி?* }
- சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? (5)
- நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது (7)
- நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை? (7)

★ **பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? (2)**

சபையில்
நிலவும்
ஐயங்களுக்கான
பதில்கள்
(7:1 - 11:1)

அதி 7. அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்.

விவாகத்தைப் பற்றிய கொரிந்தியருடைய கேள்விகளுக்கு பவுல் அளிக்கும் பதில்.

- விவாகம் செய்யாமல் இருப்பதை விட விவாகம் செய்து கொள்வது சிறந்ததா?
    - **விவாகம் செய்வதினால் வரும் நன்மைகள்** (7:2, 7, 9)
        - வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். *{ஒழுக்கக்கேடான செயல்களையும் மனப்பான்மையையும் தடுக்க உதவுகிறது }*(7:2, 9).
        - அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு..{கடவுள் *சிலருக்கு கணவன் அல்லது மனைவி என்ற வரத்தை தருகிறார், மற்றவர்களுக்கு திருமணமாகாமல் வாழத்தக்கதான வரத்தை தருகிறார்*}(7)
    - **விவாகமில்லாமல் இருப்பதன் நன்மைகள்** (1, 8, 32-35)
        - *{நேரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல், தனது முழு கவனத்தையும் கர்த்தருக்குரிய பணியில் செலுத்த வேண்டும்}*
    - விவாகம்/விவாகமின்மை எதுவுமே தேவனுடைய திட்டத்தையே சார்ந்துள்ளது..கிறிஸ்துவே நம் வாழ்வில் முதல் இடத்தில் இருக்க வேண்டும் (17-24, 29-31)

★ **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்.(23)**

சில பரிந்துரைகள்: (7:3-6, 10-16, 25-28, 36-40):

- இரட்சிக்கப்பட்ட தம்பதிகள் (3-6, 10-11)
  - இருவரும் விவாகரத்து செய்யாமல் ஒன்றாக இருக்க முயற்சி செய்ய வேண்டும் (7:10-11).
  - இருவரும் தங்கள் உடல்களை ஒருவருக்கொருவர் சமர்ப்பிக்க வேண்டும் (7:3-4).
  - உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்(7:5-6).
- புருஷன் / மனைவி இருவருள் ஒருவர் விசுவாசி (7:12-16)
  - இரட்சிக்கப்பட்ட மனைவி, முடிந்தால், இரட்சிக்கப்படாத புருஷனுடன் தொடர்ந்து வாழ வேண்டும் (7:12-13).இந்தச் செயல் இரட்சிக்கப்படாத துணையின் இரட்சிப்பில் விளைவடையலாம் (7:14).
  - இரட்சிக்கப்படாத வாழ்க்கைத் துணை, (அவன் /அவள்) பிரிந்து போக எண்ணினால் போகலாம்(7:15-16)
- கன்னிகள் (7:25-28, 36-38)
  - தகப்பன் தன் மனதின்படி செய்யக்கடவன்
- ஒரு விதவை (7:39-40)
  - தன் புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம்பண்ணிக்கொள்ளலாம்

போஜனம்

(8:1 - 11:1)

அதி 8. சகோதரனுக்கு இடறல் உண்டாக்காதிருங்கள்

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை விசுவாசிகள் உண்பது சரியா, தவறா?

- **போஜனத்தைப் பற்றி கொரிந்து சபையினரின் கேள்விக்கு பவுலின் பதில் .**
  - போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; ..(8) {*சில உணவு வகைகளை நாம் தவிர்ப்பதாலே தேவனுக்காக எந்த நற்செயலையும் நாம் செய்து விடுகிறதில்லை. அப்படிப்பட்ட உணவுப் பொருட்களை நாம் உண்பதால் நம்மைச் சிறந்த கிறிஸ்தவர்களாக மாற்றுவதும் இல்லை*}
  - பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள் (9) {*புதிதாக மனமாற்றம் பெற்றவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடைசெய்யும்படி ஏதாவது செய்து இடறல் உண்டாக்க துணியாதிருங்கள்*}
  - பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே (11) {*பிதாவாகிய ஒரே தேவனாலே அவருக்கென்று இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் அவருக்குள் விடுதலை பெற்றிருக்கிறோம் என்கிற புரிதல் எல்லாரிடமும் இல்லை*}
  - பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே {*இது ஒரு பாவச் செயலாகவும் விளங்குகிறது*} நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள் (12)
- **தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான் (3)**

அதி 9. கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்கள்

தன் அப்போஸ்தல அதிகாரத்திற்கு எதிராக கேள்வி எழுப்புவோருக்கு பவுலின் பதில்

- கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? (1) {*தனது அப்போஸ்தல தகுதிக்குக் கொரிந்து பட்டணத்து விசுவாசிகளையே நிரூபணமாகச் சுட்டிக்காட்டுகிறார்*}

பவுல் நிதி உதவி பெறுவதற்குரிய அதிகாரம் உடையவரா என்ற கேள்விக்கு அவரது பதில்

- நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? (11) {*பவுல் நற்செய்தியைப் பிரசங்கித்ததோடு ஆவிக்குரிய சத்தியங்களையும் கொரிந்தியருக்குக் கற்பித்தார் .பிரசங்கிக்கு அளிக்கப்படும் நிதி உதவி , அவர் கற்பிக்கிறவற்றின் விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மதிப்பற்றது* }
- சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. (16)
- நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். (19)
- மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (27)

★ **நீங்கள் (அழிவில்லாத கிரீடத்தைப்) பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.**

அதி 10. சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்

இஸ்ரவேல் ஜனங்களின் வீழ்ச்சியை எடுத்துக் காட்டி அறிவுரைகளைக் கூறி எச்சரிக்கிறார் பவுல்

- இஸ்ரவேல் ஜனங்களின் மேன்மை
  - தேவனுடைய மகிமையின் மேகத்தால் வழிநடத்தப்பட்டனர் (1)
  - செங்கடலின் தண்ணீர் அவர்களுக்காகப் பிரிந்தது (2)
  - இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் உணவு மற்றும் தண்ணீர் வழங்கப்பட்டது (3,4)
  - கிறிஸ்துவே அவர்களுடன் சென்றார் (4)
- இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் செய்த காரியங்கள்
  - பொல்லாங்கானவைகளை இச்சித்தார்கள் (6)
  - சிலர் விக்கிரகாராதனைக்காரரானார்கள் (7)
  - வேசித்தனம் பண்ணினார்கள் (8)
  - கர்த்தரைப் பரீட்சைப் பார்த்தார்கள் (9)
  - முறுமுறுத்தார்கள் (10)

விக்கிரக வழிபாட்டுக் கோயில்களில் நடைபெறும் விருந்துகளில் விசுவாசிகள் கலந்து கொள்ளலாமா?

- விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் (14)
  - நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? (16)
  - ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் (17)
  - அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்கள் (20)

அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைத்தால் செய்ய வேண்டியது என்ன?

- போக உங்களுக்கு மனதிருந்தால், மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள் (27)
- ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள் (28)

★ நீங்கள் ..எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

சபை ஆராதனை ஒழுக்கங்கள் (11:2 - 14:40)

ஸ்திரீ / புருஷன் - பங்கு
(11:2 - 16)

அதி 11. சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது

- புருஷனுக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் ,
- ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான்,
- கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் (3)

சில ஸ்திரீகள் தங்கள் சபைகளில் ஜெபம் செய்யும்போது / தீர்க்கதரிசனம் சொல்லும்போது தலையை மூடிக்கொள்ளவில்லை அதற்கு பவுல் அளிக்கும் விளக்கம் ::

புருஷன்	ஸ்திரீ
தன் தலையை மூடிக்கொண்டிருக்கிறவன் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான் (4)	தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிறவள் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள் (5)
தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை (7)	புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.(7)
மனிதனின் இயற்கை நிலைபாடு :: புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறது (14)	ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறது (15)



கர்த்தருடைய இராப்போஜனம்

(11:17 - 34)

அதி 11. நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிருக்க வேண்டும்

கொரிந்து சபையினர் { *தங்களுக்குள் இருந்த பிரிவினையினிமித்தம்* } கர்த்தருடைய இராப்போஜனத்தை தவறாக கடைப்பிடித்து வருவதை கண்டித்து அறிவுரை அளிக்கிறார் பவுல்

- உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்கவேண்டியதே (19)
- தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? (22)

பவுல் கர்த்தரிடத்தில் பெற்ற இராப்போஜன முறைமை

இயேசு கிறிஸ்து → என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு:

- அப்பம் - நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது (24)

போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து:

- திராட்சரசத்தையுடைய பாத்திரம் - இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது (25)

பவுல் → கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

- எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ,
    - அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான் (27)
    - ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான் (29)
- எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன் (28)
- நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் (31)
- கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறிய வேண்டும் (29)
- நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள் (33)
- நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன் (34)

★ **நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.**

ஆவியின் வரங்கள்

(12:1 - 14:40)

அதி 12. அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே

பற்பல பாஷைகளைப் பேசுதல் என்னும் வரத்தை பயன்படுத்துவதில் இருந்த தவறுகளை சரிசெய்யும் நோக்குடன் வரங்களைக் குறித்து விளக்கமளிக்கிறார் பவுல்

- ஆவிக்குரிய வரங்கள்
  - ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் (11)
  - ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (7)
  - அனைவருக்கும் ஒரே மாதிரியான வரங்களை ஆவியானவர் கொடுப்பதில்லை (29,30)
- கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வரங்களைப் பெற்றவர்களை, மனித சரீரத்தின் அவயவங்களை ஒப்புமைப்படுத்திக்காட்டுகிறார் பவுல்
  - தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் (18,12-13)
  - {*எந்த ஒரு அவயவமும் மற்ற அவயவங்களிலிருந்து தனித்து இருக்க முடியாது*} (14-17,19-24)
  - சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், ...சரீரத்தை அமைத்திருக்கிறார் (25)
  - ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும் (26)

- ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனம்
- அறிவை உணர்த்தும் வசனம்
- விசுவாசம்
- குணமாக்கும் வரங்கள்
- அற்புதங்களைச் செய்யும் சக்தி
- தீர்க்கதரிசனம் உரைத்தல்
- ஆவிகளைப் பகுத்தறிதல்
- பற்பல பாஷைகளைப் பேசுதல்
- பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல்
- அப்போஸ்தலர்
- போதகர்
- ஊழியக்காரர்
- ஆளுகை

அதி 13. மேன்மையான வழி - தலைசிறந்த அன்பு

- அன்பின் முக்கியத்துவம் (1-3)
  - மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும்
  - தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும்
  - யாவற்றையும் அன்னதானம்பண்ணினாலும், சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும்,

அன்பில்லாவிட்டால் இவைகள் நமக்கிருந்தாலும் அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

- மாசற்ற அன்பு (4-7)
  - அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; பொறாமையில்லை; தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.
- அழிவில்லா அன்பு → அன்பு ஒருக்காலும் ஒழியாது (8)
- நிலைத்திருக்கும் அன்பு → விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது (13)

அதி 14. சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது

தீர்க்கதரிசனம் உரைத்தல்

அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.(1)

நன்மைகள் →

- மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான் (3)
- சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் (4)
- அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது (22)
- அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான் (24)

- இரண்டுபேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள் (29)
- மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன் (30)
- அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம் (31)
- தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறது (32)

அந்நியபாஷை பேசுதல் {γλώσσαις (glóssais) / γλώσσῃ (glóssi) - tongues / tongue - மொழிகள் / மொழி}

- ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான் (2)

- அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது (22) {*அந்நிய பாஷைகளின் வரம் நம்பிக்கையற்ற இஸ்ரவேலுக்கான நியாயத்தீர்ப்பின் அடையாளமாகும்* }
- எல்லாரும் அந்நியபாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால் அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா? (23)
- அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும் (14)
- அந்நிய பாஷையில் நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணினாலும் மற்றவன் பக்திவிருத்தியடையமாட்டானே (17)

- அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால் அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும்,
- அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும்,
- ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும் (27)
- அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன் (28)
- அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன் (13)

- சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை (34) {*கேள்விகள் கேட்பதும் இடையூறாக இருக்கக்கூடாது*}

- சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது (26)
- தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள் (39)

★ நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள் (20)

உயிர்த்தெழுதலைக் குறித்த விளக்கம் (15:1 - 58)

கிறிஸ்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலன்

(15:1 - 28)

அதி 15. சுவிசேஷத்தில் நிலைத்திருங்கள்

உயிர்தெழுதலை மறுத்துரைப்போருக்குப் பவுல் தரும் விடை::

- நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால் {*பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தை உறுதியாய் பற்றிக்கொண்டிடுந்தால்*}, அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே (2)

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்

- கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் (3)
- அடக்கம்பண்ணப்பட்டார், வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார் (4)

இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததைக் கண்ட சாட்சிகள்

- கேபா
- பன்னிருவர்
- ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரர்
- யாக்கோபு
- அப்போஸ்தலர்
- பவுல்

மரித்தோரின் உயிர்த்தெழுதல் நிச்சயம் என்பதின் விளக்கம் ::

- மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே (13,16)
- கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால்,
    - எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா (14)
    - நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள் (17)
    - கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள் (18)
    - நாங்கள்....தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோம் (15)
    - இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் நாம் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் (19)
- கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (22)
    - அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்
    - பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்(23)
    - அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (24)

★ **பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் (26)**

ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்

(15:29 - 58)

இறந்தோர் எப்படி உயிருடன் எழுப்பப்படுவார்கள்? எத்தகைய உடலோடு வருவார்கள்? என்ற கேள்விக்கு பவுலின் பதில் ::

- விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே (36) தேவன் தமது சித்தத்தின்படியே ... விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார் (38)
- வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே (40)
- ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும் (44)
- மண்ணானவனுடைய {*ஆதாம் / மனுஷன்*} சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய {*கிறிஸ்து*} சாயலையும் அணிந்துகொள்வோம் (49)
- மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது (50)
- நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை
- கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ...நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (51)
- அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும் (54)
- மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். {*பாவியை நியாயப்பிரமாணம் குற்றப்படுத்துகிறது, அதைப் பின்பற்றுபவர்கள் மீது தீர்ப்பளிக்க அதிகாரம் பெறுகிறது*}

★ மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். (33)

★ நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள். (34)

★ கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக. (58)

இறுதி அறிவுரை
(16:1 - 24)

பவுலின் எண்ணங்கள்

(16:1 - 8)

தர்மப்பணம் - பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட திட்டம் ::

- கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கும் பண்ணப்பட்ட திட்டம்
- தர்ம பணம் பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்பட்டது (1)
- நான் {*பவுல்*} வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இருக்காதபடி பாருங்கள்
- அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன் (2)
- உங்கள் உபகாரம் எருசலேமுக்குக் கொண்டுபோகப்படும் (3)
- நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன் (3)
- மக்கெதோனியா நாட்டைக் கடந்தபின்பு உங்களிடத்திற்கு வருவேன் (5)
- பெந்தெகொஸ்தே பண்டிகைவரைக்கும் எபேசுவில் இருப்பேன்

அறிவுரைகளும், வாழ்த்தும்

(16:9 - 24)

- தீமோத்தேயு → அவன் உங்களிடத்தில் பயமில்லாமலிருக்கப் பாருங்கள் (10)ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக (11)
- அப்பொல்லோ → நற்சமயம் உண்டாயிருக்கும்போது வருவான் (12)
- ஸ்தேவானுடைய வீட்டார் → அகாயாநாட்டிலே முதற்பலனானவர்கள் , பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள்
    - இப்படிபட்டவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருங்கள் (15,16)
- ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு → நீங்கள் எனக்குச் செய்யவேண்டியதாயிருந்ததை அவர்கள் செய்திருக்கிறார்கள் (17), எனக்கும் உங்களுக்கும் ஆறுதல் செய்தார்கள்
    - இப்படிப்பட்டவர்களை அங்கிகாரம்பண்ணுங்கள் (18)

வாழ்த்துகிறவர்கள் ::

- ஆசியா நாட்டிலுள்ள சபையார் (19)
- ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்
- சகோதரரெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள் (20)
- பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன் (21)

- ★ விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள் (13)
- ★ உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது (14)
- ★ ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், கர்த்தர் வருகிறார் (22)

கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவினுடைய
கிருபை
உங்களுடனேகூட
இருப்பதாக
ஆமென்